## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| வழக்கு எண்: C.C.13 / 2022 | | |
|---|---|---|
| பெயர் : பரந்தாமன் | PW 6 | நாள் : 23.06.2025 |

வாதி சாட்சியான வா.சா. என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரந்தாமன் | தாலுக்கா | : | |
| தந்தை பெயர் | : | குப்பன் | தொழில் | : | தலைமை காவலர் |
| கிராமம் | : | | வயது | : | 49 |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது சோழவரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் கவரைபேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 26.12.2020 ஆம் தேதி நான் மேற்படி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது மேற்படி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சிவராஜ் அவர்கள், மேற்படி காவல் நிலைய குற்ற எண்.1749/2020 சட்ட பிரிவுகள் 279,304(A) இ.த.சா சம்மந்தமான விபத்து வழக்கில் இறந்துபோன ஆனந்தகுமார் வயது 35 என்பவரின் பிரேதத்தை பொன்னேரி சவசிடங்கில் இருந்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டி பஞ்சாயத்தார் முன்னிலையில் உதவி ஆய்வாளர் விசாரணை முடித்து மேற்படி பிரேதத்தையும் அதற்கான தபாலையும் என்னிடம் ஒப்படைத்தார். நான் அந்த தபாலை பெற்று பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு சென்று, அங்கிருந்த பணி மருத்துவரிடம் தபாலை ஒப்படைத்து அதன் பின்னர்,மேற்படி பிரேதத்தை மேற்படி மருத்துவரிடம் அடையாளம் காட்டினேன். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தரார். நான் அதை பெற்று அவருடைய உறவினரிடம் ஒப்படைத்தேன். பின்னர் பிரேதத்தின் உடல் கூறுகளை இரசாயன பகுப்பாய்விற்காக சென்னை மயிலாப்பூரில் உள்ள தடய அறிவியல் துறையில் ஒப்படைத்தேன். பின்னர் நிலையம் வந்து அது தொடர்பாக எனது அறிக்கையை வாய்மொழியாக சொன்னேன்.இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து 26/12/2020 அன் வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் உத்தரவிற்கு ஏற்ப நான் செயல்பட்டேன் என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட ஆவணங்கள் வழக்கின் கோப்பில் இல்லை என்றால் சரிதான்.வழக்கு

கோப்புகளின்படி பிரேத பரிசோதனை நடைபெற்ற அதே நாளில் உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லையென்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை.)**

ஓம்/– பரந்தாமன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,
Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.06.23 12:40:15 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி